# குணமாக்கும் ஞாயிறு

14 பிப்ரவரி 2016

## இறை வழிபாட்டு முறைமை

**செம்பொருள்: ''மனநல வாழ்வில் நிறைவைக் காண கருணை நிறைந்த கவனித்தல்''**

1. **இறைவழிபாட்டிற்கான அழைப்பு**:

வாயில்களைத் திறந்துவிடுங்கள்:
அவர் மீது நம்பிக்கை கொண்ட
நேர்மையான மக்களினம் உள்ளே வரட்டும்.

அவர்கள் மன உறுதி கொண்டவர்கள்:
உம்மீது நம்பிக்கை உடையவர்கள்: அவர்களை
அமைதியால் நீர் உறுதிப்படுத்துகின்றீர்.

ஆண்டவர்மீது என்றென்றும் நம்பிக்கை
கொள்ளுங்கள்: ஏனெனில், ஆண்டவர்,
என் ஆண்டவர் என்றுமுள கற்பாறை!

(ஏசாயா 26:2-4)

**2. வரவேற்பு**: குணமாக்கும் திருப்பணி நாள் இறை வழிபாட்டிற்கு வருகை தந்துள்ள ஒவ்வொருவரையும் நமது ஆண்டவரும் இரட்சகருமான இறை மைந்தன் இயேசுவின் பெயரால் வரவேற்கிறோம். நம்மை உருவாக்கின ஆண்டவர் நம் அனைவருக்கும் அளித்துள்ள நல வாழ்வை நினைக்கவும் கொண்டாடவும் இந் நாளினை சிறப்புப்படுத்துவோம்.

**3. துவக்க இறைவேண்டல்**: சர்வ வல்லமையுள்ள கடவுளே, எங்கள் பரம தந்தையே, உம்மை போற்றுவதற்கும் தொழுதுகொள்வதற்கும் நீர் எங்களுக்கு கொடுத்த ஒருமனப்பாட்டிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த வாழ்வினிலே உம்முடைய இறை சாயலை கண்டு சிந்தித்தவர்களாக நன்மை தீமையினை வேறுபடுத்திக் காண்கின்ற உம் பிள்ளைகளாக வாழ உதவி செய்யும். சிறப்பாக உம்மோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டவர்களாக நீர் எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள்ள இந்த வாழ்வை அனுபவிக்கும்படியாக கொடுத்துள்ள மனதிற்காக நன்றி செலுத்துகிறோம். நீர் எங்கள் வாழ்க்கையில் கொடுத்துள்ள நன்மைகளை ஆசீர்வாதங்களை கொண்டாடுகின்ற இந்த தருணத்தில் வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில்கூட தினமும் போராடுகின்றவர்களை நாங்கள் நினைவு கூறுகின்றோம். குணமாக்கும் திருப்பணியையும் எங்களையும் ஆசீர்வதியும் மற்றும் எங்களுடைய வாழ்வினிலே உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற வல்லமை தாரும். உம்முடைய பிள்ளைகளின் வாழ்விலே முழுமையான குணமாக்குதலை கண்டடையும்படியாக உம் மக்களுக்கு நீர் கொடுத்துள்ள தலைமைத்துவத்திற்காக நன்றி செலுத்துகிறோம். உறுதியான மனநிலைப்பாட்டை ஆசீர்வாதமாக பெற்றுள்ள நாங்கள் உம்மை உண்மையோடும் ஆவியோடும் தொழுதுகொள்ள உதவி செய்யும். எங்களின் அன்றாட வாழ்வின் போராட்டத்தில் உம்முடைய குணமாக்குதலின் தொடுதலை உணரவும் உம்முடைய குணமாக்குதலை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள ஆண்டவரே எங்களுக்கு உதவி செய்யும். இவைகளை இயேசுவின் பெயராலே வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்.

**4. துவக்கப் பாடல்**:

**5. அப்போஸ்தலர் / நிசேயா விசுவாசப் பிரமாணம் / மூவொரு கடவுளைப் போற்றுதல் / பிழையுணர்ந்து மன்றாடுதல் / பாவ மன்னிப்பின் நிச்சயம்** (பொதுவான ஆராதனை முறைமை)

**6. திருவிவிலியப் பாடங்கள்**:

முதலாவது பாடம்: புலம்பல் 3: 17-33
இரண்டாவது பாடம்: மாற்கு 3: 20-30
மூன்றாவது பாடம்: 2 கொரி 5: 1-5

**7. குணமாக்கும் திருப்பணியைப் பற்றிய ஓர் அறிமுகம்**:

இயேசுவினுடைய குணமாக்கும் திருப்பணியானது அவருடைய மனதுருக்கத்துடன் கூடிய கவனிப்பின் அடிப்படையில் அமைந்தது. இயேசுவானவர் ஒவ்வொரு தனிமனிதனும் அபரிதமான வாழ்வினைப் பெறும்படியாக விரும்பினார். அவருடைய குணமாக்கும் ஒவ்வொருவருடைய ஆவி, மனம், உடல், உணர்வு மற்றும் சமூக உணர்வு சார்ந்த பல்வேறு கோணங்களில் செயல்படுவதாக இருந்தது. ஒவ்வொரு குணப்படுத்துதலின் ஆரம்ப முதல் முடிவு வரையிலான அடிப்படையான ஊற்றே நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே. நமது இந்திய தேசத்திலே குணப்படுத்துதல் திருப்பணியானது Medical Missionary Association (MMA) என்ற அருட்பணி குழுவினாரல் 1905ம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. இந்த இயக்கமானது 1926ம் ஆண்டு Christian Medical Association of India (CMAI) ஆக பெயர் மாற்றம் பெற்றது. இப்பொழுது CMAIல் ஏறக்குறைய 300 கிறிஸ்தவ அருட்பணி மருத்துவமனைகள் அங்கத்தினர்களாக இருக்கின்றன. இந்த நிறுவனத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற வேலூர் மற்றும் லூதியான கிறிஸ்தவ மருத்துவ கல்லூரிகளும் அடங்கும். இந்த நிறுவனமானது குணமாக்கும் திருப்பணியில் 10000க்கும் அதிகமான கிறிஸ்தவ சுகாதார துறை வல்லுனர்களை ஒருங்கிணைத்து பல்வேறு மருத்துவ பணிகளை நிறைவேற்றி வருகின்றது. இந்த நிறுவனமானது நமது தேசத்தின் பல்வேறு மருத்துவ தேவைகளை நிறைவேற்றுவதன் மூலமாக ஒரு முக்கியமான இயக்கமாக வலுப்பெற்றுள்ளது. பல முக்கியமான மருத்துவ துறைகளில் சிறப்பாக தொழுநோய், காச நோய், மற்றும் HIV/AIDS போன்ற துறைகளில் CMAI அங்கத்தினர்கள் முன்னனி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். CMAIன் நோக்கமானத குணமாக்கும் திருப்பணி மூலமாக இந்திய திருச்சபைகள் இயேசுவின் அன்பு மற்றம் அவரது கட்டளைக்கு ஏற்ப ஒரு நியாயமான ஆரோக்கியமான சமூகம் உருவாவதற்கு உதவுவதே ஆகும்.

**8. அருளுரை**:

**கருப்பொருள்: ''மனநல வாழ்வில் நிறைவைக் காண கருணை நிறைந்த கவனித்தல்''**

நாம் ஏன் மற்றவர்களுக்கு கருணையுள்ள கவனித்தலை அருள வேண்டும்? நாம் ஏன் மன நல வாழ்விற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? மன உணர்விலும் மன நலத்திலும் பாதிப்படைந்தவர்க்கு உதவிடவும் அவர்களை நாம் புரிந்து கொள்வதற்கும் அவர்களுக்கு சிசிக்சை அளிப்பதற்கும் நாம் உணர்வுபூர்வமாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

**முகவுரை:**

மன நல பாதிப்படைந்தவர்களுக்கு நாம் உதவிட முயற்சிக்கும் போது நாம் கரிசனையுடனான அணுகு முறையுடனும் சரியான பார்வை/நோக்குடையவர்களாவும் இருக்கவேண்டும். இந்த அறிவும் ஞானமும் கடவுளிடத்தில் இருந்தே நாம் பெறமுடியும். நம்முடைய தவறான புரிதலினால் பல நேரங்களில் மனதளவில் பாதிப்பு அடைந்தோரை பல பெயர்கள் கொண்டு அழைத்து அவர்களை பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்குகிறோம். மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டு இருந்த இயேசுவையே மக்கள் விட்டு வைக்கவில்லை. அவரை யூத மத தலைவர்களும் பரிசேயரும் இயேசு பெயல் செபூலைக் கொண்டே பேய்களை ஓட்டுவதாக குற்றம் சாட்டினர். மற்ற மனிதர்களிடம் இருந்து மாறுபட்ட வித்தியாசமான மனிதர்களை நாம் காணும்போது இறைமகன் இயேசுவின் அன்பு மற்றும் கிருபையின் அடிப்படையில் நமது செயல்பாடு எவ்வாறு உள்ளது? நாம் இன்றைய தினத்தில் திருவிவிலியத்தில் இருந்து இந்த கேள்விக்கு பதில்களை பற்றி சிந்திப்பது நலமாயிருக்கும்.

1. அவர் மதி மயங்கி இருக்கிறார் (லூக்கா 3:22) மற்றவர்களை பெயரிட்டு அழைக்கவோ குறைவாகவோ மதிப்பிட வேண்டாம்

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த போது அனைவரிடமும் ஒரு வலிமையான எதிர்வினையை தூண்டி விடுபவராக வாழ்ந்தார். அவரைப் பின்பற்றியவர்களும் அவரது சொந்த குடும்பத்தாருமே அவரது புத்தி சுவாதீனத்ததைப் பற்றி ஐயம் கொண்டிருந்த பொழுது பரிசேயர்கள்கூட அவர் சாத்தானால் பீடிக்கப்பட்டு இருப்பதாக கருதினார்கள். என்ன பெயரிட்டாலும் அனுமானங்கள் இருந்தாலும் இயேசுவை தனிமனித அளவில் அறிந்துகொள்ளும்போது இயேசு எவரையும் பாதிக்காமல் விட்டதில்லை. இந்த நிகழ்வு இன்றைக்கும் உண்மையானதாக உள்ளது. நாம் ஒருவரை கேலியாக பெயரிட்டு அழைக்கும் போது அச்செயல் அவருக்கு தனிமை உணர்வையும் ஒடுக்கப்பட்ட நிலையையும் உருவாக்குகிறது. நாம் அப்படிப்பட்ட மனிதர்களையும் வாழ்வுச் சூழல்களையும் புரிந்து கொள்ள முயற்சிக்க தவறுவோமானால் கடவுளுடைய அற்புதமான கருணையையும் குணப்படுத்துதலையும் மற்றவர்களுக்கு காண்பிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பை நழுவ விட்டவர்களாக இருப்போம்.

2. விரக்தியும் தனிமைப்படுத்தப்பட்டதுமான மன நிலைமை (புலம்பல் 3:17-18) கடவுளுக்காக காத்திருத்தல்

அந்நியமாதல் என்ற உணர்வானது மன நலம் பாதிக்கப்பட்டவருக்கு மிகவும் துன்பப்படுத்துகின்ற உண்மையானதும் வெளிப்படையாக உணரக்கூடியதும் ஆகும். அவர்களை இன்னும் அதிகமான துயரத்திற்குள்ளாக நமது வார்த்தைகளும் செயல்பாடுகளும் தள்ளிவிடாமல் இருக்கு நாம் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். மிகவும் மோசமாக மன நிலை குன்றியவர்களுக்கு சிகிச்சை அளிப்பது என்பது மிகவும் கடினமான செயலாகவும் ஒரு சவாலாகவுமே இருக்கின்றது. அப்படிப்பட்டவர்களிடம் இருந்து நாம் தள்ளி இருக்கவும் அவர்களை நமது கையாலாகததனத்தினால் தள்ளி வைக்கவுமே முயல்கின்றோம். புலம்பல் நூலில் (புலம்பல் 3: 22-23) நாம் கடவுளுடைய மகா இரக்கத்தையும், கருணையையும் அவருடைய நம்பகத்தன்மையையும் நாம் காண்கின்றோம். நாமோ நம்மைச் சார்ந்த ஒருவரோ இந்த உணர்வுபூர்வமான போராட்டத்தில் சிக்கி தவிக்கும் போது நாம் கடவுளிடம் நம்பிக்கை வைத்தவர்களாக அவரது கிருபைக்காக காத்திருக்க கற்றுக்கொள்வோம். கடவுள் இந்த கடினமான பாதையை நாம் கடப்பதற்கு உதவுபவராக இருக்ககிறார் (புலம்பல் 3: 31-33). இந்த நம்பிக்கை ஊட்டுகின்ற மக்களை உற்சாகப்படுத்துகின்ற செய்தியை நாம் மன நலம் குன்றிய துன்பப்படுகின்ற துயரப்படுகின்ற அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்ல அழைக்கப்படுகின்றோம்.

3. இப்பூலக வாழ்வு நிலையற்ற வாழ்வாகும்: 2 கொரி 5: 1-5 இயேசுவில் நமது வாழ்வு

இந்த உலகத்திலே நமது வாழ்க்கையானது மிகவும் பலவீனமானதும் தவறாக உபயோகப்படுத்தப்பட்ட வாழ்வாகும். நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு சூழல்களினாலும் உறவுகளினாலும் நாம் பாதிப்பிற்குள்ளாக முழ்கடிக்கப்பட்டுள்ளோம். நம்மில் சிலர் அதை மேற்கொண்டாலும் அதிகமானோர் அதில் சிக்கிக்கொள்கின்றனர். நம்மில் பலர் ஏதாவது ஒரு மாற்றத்திற்காக ஏங்குகிறவர்களாகவும் புலம்புகிறவர்களாகவும் இருக்கின்றோம். 2 கொரி 5:2ல் நாம் மோட்ச வாழ்விற்காக ஏங்குவதைப்பற்றி பேசுகின்றது. இயேசு அவர் மீது நம்பிக்கை கொள்கின்ற அனைவருக்கும் ஒரு அபரிதமான முழுமையான வாழ்வை உறுதியளிக்கின்றார். இந்த முழுமையான வாழ்வானது அவரை நாம் நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாளிலிருந்தே தொடங்குகின்றது. இயேசுவில் நாம் புது சிருஷ்டிகளாக மாறும் போது நாம் தவறாக நம்முடைய சரீரத்தின் மேலும் ஆத்துமாவையும் கெடுத்துக்கொள்கின்ற நிலைமையும் மாறும். ஒரு சரியான மனநிலைமையை ஏற்படுத்திக்கொள்வதற்கும் மன நலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது மேற்சொன்ன உண்மைளை நாம் நமது மனதில் நிலை நிறுத்திக்கொள்வது மிகவும் அவசியமானதாகும். மீட்படைவதற்கும் நல் நிலைமைக்கு திரும்பவும் இயேசுவே நிலையான நம்பிக்கையாகும்.

**நிறைவாக:**

இன்றைய தினத்தின் கருப்பொருளான "மனநல வாழ்வில் நிறைவைக் காண கருணை நிறைந்த கவனித்தல்" பார்க்கின்ற நாம் கடவுளோடு கூடிய நமது உறவை புதுப்பித்துக்கொள்ளவும் தேவையுள்ளவர்களுக்கு நாம் உதவுகின்ற மனத்தை ஞானத்தை பெற்றுக்கொள்ளும்படியாக நினைவுறுத்தப்படுகின்றோம். மற்றவர்களைப் பற்றி தவறாக அனுமானிக்காமல் அவர்களைப் பற்றி புரிந்துகொள்ளும்படியாக நாம் கவனமாக இருக்க அழைக்கப்படுகின்றோம். அவர்கள் ஒருவரையும் புறம்பே தள்ளாதவரும் அனைவரிடமும் அன்பு செலுத்துகின்ற கடவுளத்தில் காத்திருக்கின்றவர்களுக்கு நம்பிக்கையும் உற்சாகத்தையும் கொடுக்க நாம் அறிவுறுத்தப்படுகின்றோம். நாம் இயேசுவிற்குள்ளாக புது சிருஷ்டிகளாக இருப்பதினால் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. இந்த செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச் சென்று இன்றைய தினத்திலேதானே முழுமையான அபரிதமான வாழ்வு தொடங்குகின்றது என்று உறுதிப்படுத்துவோமாக. இயேசுவானவர் நாம் மற்றவர் எவரையும் கடிந்து கொள்ளாமலும் ஒதுக்கி வைக்காமலும் மன நிலை குன்றியவர்களுக்கும் உதவி செய்யும்படியாக விரும்புகின்றார். மனநிலை குன்றியோரையும் நாம் அவர்கள் இருக்கின்ற நிலைமையிலேயே ஏற்றுக்கொண்டவர்களாக அவர்களையும் நம்மோடு

ஒன்றிணைத்துக்கொண்டு இறையரசை ஒற்றுமைமோடு கட்ட நாம் அழைக்கப்படுகின்றோம்.

**இறைவேண்டல்:**

அன்பான தந்தையே மனநிலை பாதிக்கப்பட்டவர்களோடு சேர்ந்து எப்படி சவால்களை மேற்கொள்ளவேண்டும் என்று காண்பித்தற்காக நன்றி செலுத்துகிறோம். வாழ்க்கையில் இப்படிப்பட்டதான சோதனையில் துயரத்தில் இருக்கின்ற உம்முடைய ஒவ்வொரு பிள்ளைக்காகவும் நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். அவர்களை நாங்கள் புரிந்து கொள்ளவும் அவர்களை தாங்கவும் எங்களுக்கு உதவி புரியும். அவர்களது துன்பத்திலேயும் துயரத்திலேயும் உம்முடைய குணப்படுத்துகின்ற அருள் அபரிதமாக இருக்கவும் அவர்கள் இதினாலே திரும்பவும் நல்ல நிலைக்கு மீட்கப்படவும் கிருபை செய்ய வேண்டிக்கொள்கிறோம். இயேசுவின் பெயராலே இவைகளை வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

**பொதுவான இறைவேண்டல்கள்**:

எங்களை நேசிக்கும் பரம தந்தையே எங்களுக்காக நீர் உருவாக்கின இந்த உலகத்தை நாங்கள் சரியாக புரிந்து கொள்ளவும் பண்படுத்தவும் பாதுகாக்கவும் எங்களுக்குள்ளும் நல்ல மனதை உருவாக்கினீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் வாழ்க்கைப் பயணத்திலே நாங்கள் ஒருவொருக்கு ஒருவர் உதவி புரியவும் தேவைகளை சந்திக்கவும் சிறப்பாக அதிகமான புரிந்துகொள்ளுதலும் தேவைகளும் உடையவர்களை கவனித்துக்கொள்ள உதவிபுரியும்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

அன்பும் கிருபையும் உள்ள பரம தந்தையே வாழ்வுப் பயணத்திலே மன அழுத்தினாலோ நெருக்கப்பட்டதினாலேயோ தீய சக்திகளால் வீழ்ச்சியடைந்தவர்களுக்காக வேண்டிக் கொள்கிறோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் பேணப்படவும் கவனித்துக் கொள்ளப்படவும் வேண்டிக்கொள்கிறோம். நோயாளிகளை கவனித்துக்கொள்கின்ற சுகாதார வல்லுனர்களுக்காக வேண்டிக்கொள்கிறோம். மருத்துவ உதவியைத் தேடி வருகின்ற ஒவ்வொருவருக்கும் அவர்கள் இரக்கத்தோடு பொறுமையோடு திறமையோடு நோய்களை அடையாளம் கண்டுகொள்ளவும் அதற்குரிய சிகிச்சை அளிக்கவும் உதவிபுரியும்

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

கடவுளே வாழ்வின் தேவைகளை சந்திக்க முடியாமல் மனநல காப்பகங்களிலும் மருத்துவ மனைகளிலும் இருப்பவர்களுக்காக வேண்டிக்கொள்கிறோம். அவர்களை கவனித்துக கொள்ளும்படியாக முயற்சிக்கின்ற குடும்பத்தினர்கள், நண்பர்கள் மற்றும் அக்கம்பக்கத்தில் இருக்கின்றவர்கள் இவர்களைக் கவனித்துக் கொள்ளும்படியாக பெலனடைய அப்படிப்பட்டவர்களுடைய மன நோயாளிகள் கடவுளின் அருளால் குணப்படவும் வேண்டிக்கொள்கிறோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

எல்லாம் வல்ல இறைவனை CMAIன் அனைத்து அங்கத்தினர்களுக்காகவும் உறுப்பினர் மருத்துவமனைகளுக்காகவும் அவர்கள் உதவுகின்ற மனசோர்பையுடைய உற்சாகத்தை இழந்த தற்கொலை எண்ணங்களுடைய தனிமைப்படுத்துள்ளவர்களுக்காவும் நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். பிளவுபட்ட இல்லங்களிலிருந்தும் குடும்ப பிரிவினையினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்காக வேண்டிக்கொள்கிறோம். இப்படிப்பட்ட மக்கள் குணப்படவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்காக உழைக்கின்ற உதவுகின்ற நிறுவனங்களுக்காக மையங்களுக்காக நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

இறைவனே மக்கள் அபரிதமான முழுமையான வாழ்க்கை வாழ்வதற்கு இடைஞ்சலாக உள்ள பிரச்சனைகளை கண்டுபிடித்து களைய முயற்சிப்பதன் மூலமாக CMAI யானது இந்திய திருச்சபையின் மருத்துவ கரமாக சிறப்பாக செயல்பட வேண்டிக்கொள்கிறோம். இந்திய திருச்சபையையும் CMAIயும் ஒன்றாக இணைந்து உம்முடைய குணமாக்குதலை தேவையான மக்கள் தங்களது அனைத்து நிலைகளிலும் பெற்றுக்கொள்ள உழைக்க நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

இப்பொழுது ஆராதனை நடத்துபவர் மற்ற வேண்டுதல்களை ஏறெடுத்து பொது வேண்டுதலோடு நிறைவு செய்யலாம்)

பாடல் (காணிக்கை)

(திருவிருந்து பரிமாறப்படுமாயின் தயவுகூர்ந்து அப்பம் பிட்குதல் பகுதியை தொடருமாறும் ஆராதனையை முடிவு ஜெபத்தோடும் ஆசீர்வாதத்தோடும் நிறைவு செய்யலாம்)

குணப்படுத்தும் திருப்பணி ஓய்வுநாளில் சேகரிக்கப்பட்ட
காணிக்கையானது கீழ் கண்ட முகவரிக்கு
வங்கி வரையோலை மூலமாக அனுப்பப்படலாம்:

Christian Medical Association of India
Plot No. 2, A-3 Local Shopping Centre, Janakpuri,
New Delhi 110058

இந்த ஆராதனை முறைமையின் மொழிபெயர்ப்பானது 29 ஜனவரி 2016ற்கு பின்பு www.cmai.org ல் கிடைக்கும். உங்களுக்கு தேவையான மொழிபெயர்ப்பை எடுத்து உங்கள் ஆலய ஆராதனையில் பயன்படுத்தவும்